DVC 10/2025
Date: 10.09.2025
PW1- சுபாஸ்ரீ, த/பெ. சுப்பிரமணி

1ம் எதிர்மனுதாரர் ஆஜர். 2 மற்றும் 3ம் எதிர் மனுதாரர்கள் ஆஜர் இல்லை. மனுதாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

<u>**குறுக்குவிசாரணை**</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.எஸ்.சி நர்சிங் படித்துள்ளேன். நான் தற்போது எங்கு பணிபுரிந்து வருகிறேன் என்றால் செங்கம் அருகே உள்ள பெரும்பாக்கம் கிராமத்தில் உள்ள இடைநிலை சுகாதார செவிலியராக தற்காலிகமாக பணிசெய்து வருகிறேன். நான் எப்பொழுதில் இருந்து மேற்படி பணியில் உள்ளேன் என்றால் 2022ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து பணிசெய்துவருகிறேன். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் நான் 31.12.2021ம் ஆண்டு பணியில் சேர்ந்துவிட்டேன் என்றால் நான் ஆணையை பெற்று சிறிது நாட்கள் கழித்து பணியில் சேர்ந்தேன். நான் தற்போது எவ்வளவு சம்பளம் பெறுகிறேன் என்றால் 18,000/-ம் ரூபாய் சம்பளம் பெறுகிறேன். எதிர்மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் பி.ஈ படித்துள்ளார். எங்கள் இருவரின் திருமணம் திருமணத் தகவல் மையம் மூலமாகத்தான் ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான். திருமணத்தின் போது எனக்கு எனது பெற்றோர் எவ்வளவு நகை அணிவித்தார்கள் என்றால் எனக்கு 15 பவுனும் எனது கணவருக்கு 5 பவுனும் நகை போட்டார்கள். நான் சொல்வது பொய் என்றாலும் மொத்தமாகவே 15 பவுன் நகை மட்டும் தான் எனது பெற்றோர் எனது திருமணத்தின்போது அணிவித்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி எதிர்மனுதாரரின் வீட்டில் மொத்தமாக எத்தனை நபர்கள் வசிக்கிறார்கள் என்றால் எதிர்மனுதாரரின் தாயார், தந்தையார் மற்றும் அவரது பாட்டி மற்றும் அவருடைய மூத்த சகோதரி வீட்டிற்கு வந்து வந்து போவார். எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பே மேற்படி எதிர்மனுதாரரின் சகோதரிகள் இருவருக்கும் திருமணம் நடந்துவிட்டது என்றால் சரிதான். மேற்படி அனைவருமே திருமணமாகி அவரவர் கணவர்கள் வீட்டில்தான் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். திருமணமாகி எத்தனை மாதங்கள் நான் எதிர்மனுதாரர் வீட்டில் வாழ்ந்தேன் என்றால் 3 மாதங்கள் மட்டும் வாழ்ந்தேன். அதன் பின்னர் எதிர்மனுதாரர் வீட்டிற்கு எத்தனை முறை நான் சென்றேன் என்றால் 2 முறை சென்றேன் ஞாபகம் இல்லை.

கடைசியாக நான் 2025ம் வருடம் ஏப்ரல் மாதம் சென்றேன். எதற்காக சென்றேன் என்றால் எதிர்மனுதாரரின் தந்தை, தாயாரிடம் எதிர் மனுதாரர் பேசச்சொன்னதால் நான் சென்று பேசினேன். நான் மட்டும் தான் சென்றேனா என்றால் சரிதான். நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ஒரு முறை நானும் எனது சித்தி சூரியா ஆகியோர் ஒருமுறை சென்று எதிர்மனுதாரர் மற்றும் அவர்களின் குடும்பத்தாரிடம் பேசினோம். நான் சென்று மேற்படி எதிர்மனுதாரரின் குடும்பத்தாரிடம் பேசியபோது எனது தந்தை, தாயாரை வந்து பேச சொன்னார்கள். நான் சென்று எனது அப்பா, அம்மாவை பேச சொன்னதற்கு எனது அப்பா அம்மா எதிர்மனுதாரர்கள் மூவரும் என்னை அடிக்கிறார்கள் என்றும் எனக்கு சாப்பாடு போடுவதில்லை என்பதாலும், எனது அம்மா, அப்பா ஆகியோர் பேச முன்வரவில்லை. என்னுடன் உடன் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர் என்றால் என்னை உட்பட நான்கு நபர்கள் உள்ளனர். அதில் ஒரு அண்ணன் மற்றும் 2 தங்கைகள் உள்ளனர்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-(M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்